1995 மார்ச் 20]

அமைப்புகளைப் பிரிக்கிறபொழுது, கீழ்நிலை அமைப்புகள் அதிகமாகிறபொழுது, மேல் அமைப்புகளை அப்படிப் பிரிக்க வேண்டுமென்ற தேவை ஏற்படுகிறபொழுது அரசு அதைப்பற்றிப் பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 63, திரு. சஞ்சய் ராமசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

63.—

விருதுநகர் பகுதியில் காலரா நோய் பரவுவதைத் தடுத்தல்

**35963—திரு. சஞ்சய் ராமசாமி:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராசர் மாவட்டம், விருதுநகர் நகரப் பகுதியில் அடிக்கடி காலரா நோய் பரவி வருவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) இதுவரை அங்கு காலரா நோயினால் இறந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களின் குடும்பத்திற்கு அரசு நிதி உதவி அளித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ): காமராசர் மாவட்டம், விருதுநகர் பகுதியில் காலரா நோய் பரவும் தகவல் தெரிந்த உடனேயே அனைத்து தடுப்பு நடவடிக்கைகளும், கட்டுப்பாடு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. பொதுச் சுகாதாரத் துறை இந்த நடவடிக்கையை மேற்கொண்டது. அங்கே காலராவால் யாரும் இறக்கவில்லை. ஆனால் குடல் அலர்ஜி நோயால் ஏப்ரல் 94-வரை 3 பேர் இறந்துள்ளார்கள். காலரா மற்றும் தொற்று நோயால் இறக்கக்கூடியவர்களுக்கு எந்த இழப்புத் தொகையும் கொடுக்கப்படுவதில்லை.

திரு. சஞ்சய் ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைக் கேட்டபொழுது அங்கே, காமராசர் மாவட்டம், விருதுநகர் நகரத்தில் காலரா நோய் பரவிக்கொண்டு இருந்தது. ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்

[1995 மார்ச் 20

தலைவியின் ஆட்சியில் மாண்புமிகு தமிழக முதல்வருடைய கவனத்திற்கு அல்லது அவர்களுடைய ஆட்சியில் எந்த அமைச்சரிடத்தில், எந்தப் பிரச்சினையையும் எடுத்துச் சென்றாலும் உடனடியாக அதிரடி நடவடிக்கை எடுக்கக்கூடிய இந்த ஆட்சியில் மாண்புமிகு அமைச்சரிடத்தில் விருதுநகரில் காலரா நோய் பரவுவதைப் பற்றி எடுத்துச்சொன்னவுடன், உடனடியாக நடவடிக்கை எடுத்தார்கள். இன்றைக்கு விருதுநகர் நகரத்தில் காலரா பரவுவது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் என்னுடைய தொகுதி சார்பில், விருதுநகர் மக்கள் சார்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *64*, திருமதி ஆர். சாவித்திரி அம்மாள், இருக்கையில் இல்லை.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பக்கத்துத் தொகுதிக்காரர் கேட்டாலும் பரவாயில்லை.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: இது பொதுவான கேள்விதான். யார் வேண்டுமானாலும் கேட்கலாமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பொதுக் கேள்வி அல்ல. ஆனால், பொதுவாக ஒரு நடைமுறை வைத்திருக்கிறோம். (குறுக்கீடு) உங்களுக்கு மணலூர்பேட்டை எங்கே இருக்கிறது என்றாவது தெரியுமா? உட்காருங்கள். மணலூர்பேட்டை இந்த இடத்தில் இருக்கிறது என்று தெரிந்தவர்கள் கேட்கலாம்.

திரு. ஆர்.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணலூர்பேட்டை பற்றி உங்களுக்குத் தெரியுமா? அப்படிக் கேட்டால் பரவாயில்லை. திரு. ஆர்.பி. பரமசிவம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-20

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூலிங் பார்ட்டிதான் கேட்க வேண்டுமென்று சொல்லக்கூடாது.